1972 மார்ச் 21]

Rent Collectors in Madras Corporation

* 598 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether posts of Rent Collectors were filled in the Madras Corporation during 1971;

(*b*) the method adopted for making the selection;

(*c*) whether (1) the Employment Exchange and (2) Public Service Commission were consulted; and

(*d*) the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 1971-ல் இரண்டு ஏவலர்கள், வாடகை வசூலிப்போராக நியமிக்கப் பட்டுள்ளனர். வாடகை வசூலிப்போர் பதவிகளுக்கான விண்ணப் பங்கள் அனுப்பப்படலாம் என 1971 செப்டம்பரில் நாளிதழ்களில் மாநகராட்சிப் பொறுப்பதிகாரியால் விளம்பரம் வெளியிடப் பட்டது. அதையடுத்து வரப்பெற்ற விண்ணப்பங்கள் அவரால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

(இ) பதவிகள் காலி இருப்பது குறித்து நாளிதழ்களில் விளம்பரம் கொடுக்கப்பட்டு உரிய தகுதிகளைப் பெற்றவர்களிலிருந்து பொருத்தமானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

(உ) இல்லை.

(எ) 1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் விதித் துறைகளின்படி, சம்பளம் அல்லது அதிக அளவுச் சம்பளம் ரூ. 100-க்கு மேற்படுகின்ற III, IV- ஆம், வகுப்புப் பதவிகள் அனைத்திற்கும், நியமனக் குழுவினால் ஏற்பளிக்கப்படும் விண்ணப்ப தாரர்கள் பட்டியலிலிருந்து மாநகராட்சி பொறுப்பதிகாரி நியமனம் செய்கிறார். அவர், விண்ணப்பதாரர் பட்டியலில் உள்ள விருப்ப வரிசை முறைப்படி அவர்களை நியமனம் செய்கிறார்.

திரு. என். டென்னிஸ் : எம்பிளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ஜை கன்சல்ட் செய்து நியமனம் நடத்த வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாநகராட்சி மன்றத்தில் தனி நியமனக்குழு இருக்கிறது. அந்த நியமனக்குழு விண்ணப்பங்களைப் பெற்று, பரிசீலித்து, நியமித்து வருகிறது. வேலை வாய்ப்புத் துறையினர் அவர்களை கலந்தாலோசிக்க வேண்டும்.